புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்து! மாநிலங்களவையில் தி.மு.கழகத்தின் வாதங்களை

தமிழ்நாட்டின் உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.க்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 26-

"I BELONG TO THE DRAVIDIAN STOCK" எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைகளை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.க்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

"I BELONG TO THE DRAVIDIAN STOCK" எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைக்குரலை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி..க்கள்!

திராவிடத் தூணாக முழங்கி விடைபெற்ற அண்ணன் வைகோ அவர்களது உரையில் உள்ளம் உருகி நெகிழ்ந்தேன்!

சண்முகம், எம்.எம்.அப்துல்லா ஆகியோரது பணிகளுக்குப் பாராட்டும் எம்.பி.,யாகத் தொடரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், புதிய குரலாக ஒலிக்கவுள்ள அருமை நண்பர்கமல்ஹாசன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோருக்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று (25.07.2025) சென்னை, அம்பத்தூர், சர் ராமசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, கா. கணபதி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றிஅழகன், நில நிர்வாக ஆணையர் கே. எஸ். பழனிச்சாமி, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ராஜகோபால் சுன்கரா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) சாந்தகுமாரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-2026 ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பட்ட படிப்புகளுக்கான தகுதி பெற்ற மாணவர்களின் தரவரிசை பட்டியலினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.7.2025) வெளியிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, துணை இயக்குநர்கள் மரு.கராமத், மரு.சாந்தினி, மரு.ஷீபா மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்

ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் ஜூலை 26;

திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் குறித்து மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு வருமாறு-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் 28072025 (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் கனகம்மாசத்திரம், AJS மஹால் (காவல்நிலையம் எதிரில்) திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ எனது தலைமையில் நடைபெறவுள்ளது.

ஒன்றிய கழகச் செயலாளர் கூஞ்ர் எம்.ராஜேந்திரன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் ப.அப்துல்மாலிம், பிரபு கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் வரவேற்புரையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன், ஆர். இராஜா ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆவடி சா.மு.நாசர், கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர், கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்கள்.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, எம்,மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

ஒன்றிய அமைப்பாளர்கள் ஆர்.யுவராஜ், த. நந்தகுமார் நன்றியுறை கூறுகின்றனர்.

எனவே, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி

பொருள்: சட்டமன்ற தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு களப் பனி மற்றும் சமூக வலைத் தளம் பயிற்சி கூட்டம் குறித்து.

கிளை கழகம் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம் குறித்து.

முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பது குறித்து. என திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் தமது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 156வது நாள்!

துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஜூலை.26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 156 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (25.7.2025) துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60, 4 வது கடற்கரை சாலை, வரதராஜன் தெரு சந்திப்பு. 2)துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54, தங்கசாலை தெரு, மாநகராட்சி அலுவலகம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பிவிஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன்,

எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதியில் உள்ள பள்ளிப்பட்டு ஒன்றியம் கோனேடும்பேட்டை கிராமத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் பல்வேறு அடிப்படை வசதி கோரிக்கைகளை கேட்டறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார் அருகில் பள்ளிப்பட்டு ஒன்றிய செயலாளர் சி.ஜே. சீனிவாசன், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.

2025–26–ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம், பல் மருத்துவம் – மருத்துவம் சார்ந்த

பட்டப் படிப்புகளுக்கான தகுதி பெற்ற மாணவர்களின் தர வரிசைப் பட்டியல்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை, ஜூலை 26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, 2025-2026-ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பட்டப் படிப்புகளுக்கான தகுதி பெற்ற மாணவர்களின் தரவரிசை பட்டியல் வெளியிடப் பட்டது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (25.07.2025) சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-2026 ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பட்ட படிப்புகளுக்கான தகுதி பெற்ற மாணவர்களின் தரவரிசை பட்டியலினை வெளியிட்டார்கள்.

பிறகு, அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

MBBS/BDS மாணவர்களுக்கு தரவரிசைப் பட்டியல் வெளியீடு

தேர்வுக்குழு, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் சார்பில் 2025-2026ஆம் ஆண்டின் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம், அரசு மருத்துவ இடங்கள், சுயநிதி மருத்துவக்கல்லூரிகளில் உள்ள அரசு மருத்துவ இடங்கள், சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள நிர்வாக மருத்துவ இடங்களில் சேர்வதற்குரிய விண்ணப்பங்கள் இணையதளத்தின் மூலம் 06.06.2025 முதல் 29.06.2025 வரை பெறப்பட்டன. இந்த ஆண்டு 72,473 விண்ணப் பங்கள் பெறப்பட்டன.

இது கடந்த ஆண்டைகாட்டிலும் 29,680 விண்ணப் பங்கள் அதிகமாகும். மாணவர்களின் சிரமங்களை குறைக்கும் வகையிலும், சரி பார்ப்பு பணிகள் சிறப்பாக நடைபெறும் வகையிலும் அதிக கால அவகாசம் வழங்கப்பட்டது. இதையடுத்து அதிக அளவிலான விண்ணப் பங்கள் பெறப்பட்டன. மேலும் 25 மாணவர்கள் சமர்ப்பித்த போலி சான்றிதழ்கள் கண்டறியப்பட்டு அம் மாணவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு ஒதுக்கீடு விண்ணப்பங்கள்

இதில் 7.5% அரசு பள்ளி மாணவர்களின் உள் ஒதுக்கீட்டுக்கு 4,281 விண்ணப் பங்கள் பெறப்பட்டு இருக்கிறது. விளையாட்டுப் பிரிவுக்கு 477 விண்ணப் பங்கள் பெறப்பட்டிருக்கிறது. முன்னாள் படைவீரர் பிரிவு ஒதுக்கீட்டிற்கு 642 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டு பிரிவுக்கு 148 விண்ணப் பங்கள் பெறப்பட்டிருக்கிறது. பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலித்து மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலும் மற்றும் 7.5% அரசு பள்ளி மாணவர்களின் உள் ஒதுக்கீட்டிற்கான பட்டியலும் தற்போது வெளியிடப்படவிருக்கிறது.

அரசு ஒதுக்கீடு விண்ணப்பங்கள்

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுய நிதி மருத்துவக்கல்லூரிகளின் மொத்த எம்.பி.பி.எஸ். இடங்கள் 6,600. அரசு பல் மருத்துவக்கல்லூரிகளில் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுய நிதி பல் மருத்துவக்கல்லூரிகளில் மொத்த BDS பல் மருத்துவ இடங்கள் 1,583. இந்த அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் 42,315. அதில் ஏற்றுக்கொள்ள தகுதி படைத்த விண்ணப்பங்கள் என்கின்ற வகையில் 39,853. ஆண் மாணவர்களை பொறுத்தவரை 13,998, மாணவிகளை பொறுத்தவரை 25,855.

7.5% ஒதுக்கீடு விண்ணப்பங்கள்

மேலும் 7.5% ஒதுக்கீட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த எம்.பி.பி.எஸ் இடங்கள் 495. 7.5% ஒதுக்கீட்டிற்கான அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த BDS இடங்கள் 119. இந்த இடங்களுக்கு மாணவர்களிடம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 4,281. அதில் எற்றுக் கொள்ளப்பட்ட மொத்த விண்ணப்பங்களில் தகுதியுடையவர்கள் 4,062. மாணவர்களை பொறுத்தவரை 1,136, மாணவிகளைப் பொறுத்தவரை 2,926.

நிர்வாக ஒதுக்கீடு விண்ணப்பங்கள்

2025-26-ஆம் ஆண்டிற்கான சுயநிதி மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுக்கான Management Quota என்று சொல்லக்கூடிய நிர்வாக ஒதுக்கீட்டை பொறுத்தவரை சுயநிதி மருத்துவக் கல்லூரிகளின் மொத்த எம்.பி.பி.எஸ். இடங்கள் 1144, சுயநிதி பல் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள BDS பல் மருத்துவ இடங்கள் 515, NRI ஒதுக்கீட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள எம்.பி.பி.எஸ். இடங்கள் 592, NRI ஒதுக்கீட்டில் சுயநிதி பல் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள BDS பல் மருத்துவ இடங்கள் 15.

இந்த நிர்வாக ஒதுக்கீட்டிற்கான இடங்களுக்கு மாணவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 33,692, அதில் தகுதியுள்ள விண்ணப்பங்கள் 30,428. மாணவர்களைப் பொறுத்தவரை 9,737 மாணவிகளைப் பொறுத்தவரை 18,542.

மருத்துவம் சார்ந்த பட்டப் படிப்பு

மேலும் Allied Health Care எனப்படும் மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகளில் B.Sc நர்சிங், பி.பார்ம், என்று 19 வகையான 4 வருட பட்டப்படிப்புகளுக்கும் Pharm D 6 வருடம் மற்றும் 3 வருட பட்டப்படிப்புகளுக்கும் செவிலியர் பட்டயப்படிப்புக்கும் 17,06,2025 முதல் 07.07.2025 வரை இணைய வழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

பெறப்பட்ட விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி முடிவடைந்து இன்று அதற்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது. Allied Health Care Course யைப் பொறுத்தவரை அரசு கல்லூரிகளில் இடங்கள் 3,256 சுயநிதி கல்லூரிகளில் 20,026 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 61,735. Pharm D 6 வருட சுயநிதிக் கல்லூரிகளில் 723 இடங்கள் Pharm D 3 வருடப் பட்டப்படிப்புகளுக்கு 61 என்கின்ற வகையில் இடங்கள் உள்ளன. Pharm D 6 வருடப்பட்டப்படிப்புகளுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 12,192 Pharm D 3 இடங்கள் உள்ளன.

செவிலியர் பட்டயப்படிப்புக்கு அரசு கல்லூரிகளில் 2,080 இடங்கள் உள்ளன. செவிலியர் பட்டயப் படிப்புக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 16,746 ஆகும். விண்ணப்பங்களைப் பொறுத்தவரை முழுமையாக பரிசீலித்து, தகுதி பெற்ற மாணவர்களுக்கான தரவரிசைப்பட்டியல் இன்று வெளியிடப்பட்டிருக்கிறது என்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, துணை இயக்குநர்கள் மரு.கராமத், மரு.சாந்தினி, மரு.ஷீபா மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு விழிப்புணர்வு முகாமினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து பார்வையிட்டார். இதில், மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், மு.பாபு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஊராட்சி குழுத்தலைவர் உதயா கருணாகரன், துணைத் தலைவர் ஏ.வி.எம்.இளங்கோ, காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆப்பூர் சந்தானம், செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், செங்கல்பட்டு நகர்மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள். விவசாயிகள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.